

# சேர்க்கைக் கொள்கையில் மாற்றங்கள்

## குடும்பங்களுக்கான தகவல்

## அரச பாடசாலைக் கல்வியை ஏன் தேர்வு செய்ய வேண்டும்?

NSW அரச பாடசாலைக் கல்வி அமைப்பு அனைத்து மாணவர்களுக்கும் உலகத் தரம் வாய்ந்த கல்வியை வழங்குகிறது, இதன் மூலம் இன்றைய பிள்ளைகள் வெற்றிபெறவும், நாளைய சிறந்த சமூகங்களை உருவாக்கவும் தயார்படுத்துகிறது. முழுமைத் தன்மையுள்ள, உயர்தர கல்வி வழங்கீடுகள் மற்றும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம், கலை, விளையாட்டு மற்றும் அதற்கு அப்பால் உள்ள நிகரற்ற இணைப் பாடத்திட்ட வாய்ப்புகளுடன், எங்களின் பன்முகத் தன்மையும் அனைவரையும் உள்வாங்கும் தன்மையும் கொண்ட அரச பாடசாலைகள் ஒவ்வொரு மாணவரும் தங்கள் முழுத் திறனை அடைய உதவுகின்றன.

## சேர்க்கைக் கொள்கை என்றால் என்ன?

கல்விச் சட்டத்தின் (Education Act 1990) கீழ் பாடசாலைகள் தங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்ய மாணவர் சேர்க்கைக் கொள்கை உதவுகிறது, இது அனைத்து மாணவர்களும் தங்கள் உள்ளூர் அரச பாடசாலையை அணுகுவதை உறுதி செய்கிறது. NSW அரச பாடசாலைகளில் மாணவர் சேர்க்கை எவ்வாறு கையாளப்படுகிறது என்பது பற்றிய தெளிவான தகவலை பணியாளர்களுக்கும் சமூகத்திற்கும் இந்தக் கொள்கை வழங்குகிறது.

## இந்த கொள்கை ஏன் மாறுகிறது?

NSW கல்வித் திணைக்களமானது, தற்போதைய சேர்க்கைக் கொள்கை குறித்து கல்விப் பங்காளிகள், சமூகக் குழுக்கள் மற்றும் பாடசாலை தலைமைக் குழுக்களுடன் ஆலோசனை நடத்தியது. NSW அரச பாடசாலைகளில் சேர முயற்சிக்கும் போது குடும்பங்கள் சந்திக்கும் தடைகளை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவம் குறித்து குறிப்பிடத்தக்க பின்னூட்டங்களைப் பெற்றுள்ளோம். புதுப்பிக்கப்பட்ட சேர்க்கைக் கொள்கை இந்தத் தடைகளை நிவர்த்தி செய்கிறது மற்றும் சமமான மற்றும் அணுகக்கூடிய அரச பாடசாலை அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் துறையின் அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகிறது.

## மாற்றங்கள் என்ன?

பின்வரும் மாற்றங்கள் 2025 தவணை 1-இல் தொடங்கும் அனைத்து மாணவர் சேர்க்கைகளுக்கும் பொருந்தும்.

### தற்காலிக குடியுரிமையாளர்கள்

தற்காலிக வதிவிட விசாவில் உள்ள அனைத்து மாணவர்களும் இப்போது அவர்களின் வதிவிட முகவரியின் அடிப்படையில் தங்கள் உள்ளூர் பாடசாலையில் சேர முடியும்.

தற்காலிக திறன்கள் பற்றாக்குறை விசாக்களில் (துணைப்பிரிவு 482) பிராந்தியங்களில் உள்ள குடும்பங்களுக்கு சேர்க்கைப் பதிவுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும், அதாவது சிட்னி பெருநகரம் மற்றும் வுல்லங்கொங்கிற்கு வெளியில் வசிப்பவர்கள்.



NSW GOVERNMENT

### உள்ளூர்ப் பகுதி சாரா மாணவர்களது சேர்க்கைக்கான புதுப்பிக்கப்பட்ட வரைக்கூறுகள்

NSW அரச பாடசாலைகள் குறிப்பிட்ட உள்ளூர் சேர்க்கை பகுதிகளைக் கொண்டுள்ளன. பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள உள்ளூர்ப் பகுதிகள் திணைக்களத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த பாடசாலைகள் தங்கள் உள்ளூர் சேர்க்கை பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு போதுமான இடங்கள் இருப்பதை உறுதி செய்கின்றன. இடங்கள் இருந்தால், உங்களது நியமிக்கப்பட்ட பகுதிக்கு வெளியே உங்கள் பிள்ளையை 'உள்ளூர் பகுதி அல்லாத சேர்க்கை' என்று சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

புதுப்பிக்கப்பட்ட தேவைப்பாடுகள், தற்போது சேர்ந்துள்ள மாணவர்களின் உடன்பிறப்புகளுக்கான உள்ளூர் அல்லாத சேர்க்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றன, அதில் தகுதியுள்ள பிரதான பாடசாலைகளில் ஆதரவு வகுப்புகளில் சேர்ந்த மாணவர்களின் உடன்பிறப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

புதுப்பிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் கீழ், பாடசாலை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான உள்ளூர் அல்லாத சேர்க்கைகளையும் பாடசாலைகள் தற்போது பரிசீலிக்கலாம்.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### இந்த மாற்றங்கள் என் பிள்ளைக்குப் பொருந்துமா?

பின்வருவன பொருந்துமாயின், NSW அரச பாடசாலைகளில் சேர்வதற்கான மாற்றங்கள் உங்களுக்குத் தொடர்புடையதாக இருக்கும்:

- உங்கள் பிள்ளை பாடசாலை செல்லும் வயதில் இருந்து மற்றும் தற்காலிக வதிவிட விசாவில் இருந்தால், அல்லது
- உங்கள் பிள்ளை பாடசாலை செல்லும் வயதில் இருந்து மற்றும் அவரின் உடன்பிறந்தவர் தற்போது வேறு NSW அரச பாடசாலையில் சேர்க்கப்பட்டிருந்தால் மேலும் உங்கள் பிள்ளை அதே பாடசாலையில் சேர வேண்டும் என்று நீங்கள் விரும்பும் பட்சத்தில் ஒரு பாடசாலை உங்கள் பிள்ளையின் சேர்க்கையை ஏற்றுக்கொள்ளுவது அவர்களின் திறன் மற்றும் தகுதி அளவுகோல்களைப் பொறுத்தது.
- உங்கள் பிள்ளையை சேர்த்துக்கொள்ளும் பகுதிக்கு வெளியே உள்ள NSW அரச பாடசாலை ஒன்றில் நீங்கள் பணியாளராக பணியாற்றுகிறீர்கள். ஒரு பாடசாலை உங்கள் பிள்ளையின் சேர்க்கையை ஏற்றுக்கொள்ளுவது அவர்களின் திறன் மற்றும் தகுதி அளவுகோல்களைப் பொறுத்தது.

### ஒவ்வொரு பாடசாலையும் இந்த மாற்றங்களைப் பின்பற்ற வேண்டுமா?

அனைத்து பாடசாலைகளும் தற்காலிக வதிவிட விசாவில் உள்ள மாணவர்களுக்கான மாற்றங்களைப் பின்பற்ற வேண்டும்.

பெரும்பாலான பாடசாலைகள், அவற்றின் திறனைப் பொறுத்து, 2025 தவணை 1-இல் சேரும் உள்ளூர் பகுதி அல்லாத மாணவர்கள் சேர்க்கைகளுக்கு மாற்றங்களைப் பின்பற்ற வேண்டும்.

தற்காலிக வதிவிட மாணவர்கள் மற்றும் உள்ளூர் பகுதி அல்லாத மாணவர்களுக்கான சேர்க்கை கொள்கை மாற்றங்கள் சிறப்பு அமைப்புகள் அல்லது திட்டங்களுக்கான தகுதித் தேவைகளைப் பாதிக்காது. முழுமையாகத் தேர்ந்தெடுக்கும் பாடசாலைகள், குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பாடசாலைகள் (schools for specific purposes (SSPs)), தொலைதூரக் கல்விப் பாடசாலைகள் மற்றும் குறிப்பிட்ட தகுதித் தேவைகளைக் கொண்ட வகுப்புகள் அல்லது திட்டங்களைக் கொண்ட பாடசாலைகள் (எடுத்துக்காட்டாக, வாய்ப்பு வகுப்புகள், சிறப்பு விளையாட்டு மற்றும்/அல்லது காட்சி கலை கல்வி) அவற்றின் தற்போதைய சேர்க்கை செயல்முறையைத் தொடரும்.

ஒற்றைப் பாலினப் பாடசாலைகளில் சேரும் பிள்ளை அப்பாடசாலையின் பாலினத்திற்கான தகுதித் தேவையைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் இந்த மாற்றங்களை ஒற்றைப் பாலினப் பாடசாலைகள் பின்பற்ற வேண்டும். இந்த மாற்றங்கள் எவ்வாறு பொருந்தும் என்று அறிய தொடர்புடைய பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.

### எனது பிள்ளை தற்போது பாடசாலையில் சேர்ந்துள்ள மாணவரின் உடன்பிறந்தவராக இருந்தால், உள்ளூர் பகுதி அல்லாத மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பம் தானாகவே ஏற்றுக்கொள்ளப்படுமா?

இந்த மாற்றங்கள் உங்கள் பிள்ளையை அவர்களது உடன்பிறந்தவர்கள் உள்ள அதே உள்ளூர் பகுதி அல்லாத அரச பாடசாலையில் சேர்ப்பதற்கு உத்தரவாதம் அளிக்காது. தற்போது சேர்க்கப்பட்ட மாணவர்களின் உடன்பிறப்புகளுக்கான உள்ளூர்ப் பகுதி அல்லாத சேர்க்கைகளுக்கு பாடசாலைகள் முன்னுரிமை அளிக்கும், ஆனால் அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வது பாடசாலையின் கொள்திறனைப் பொறுத்தது. மேலும் தகவலுக்கு சம்பந்தப்பட்ட பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.

### இனிமேல் உடன்பிறந்தவர்கள் மட்டுமே உள்ளூர் பகுதி அல்லாத சேர்க்கைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்று அர்த்தமா?

இல்லை, உங்கள் பிள்ளை பாடசாலையில் சேரத் தகுதி பெற்றிருந்தால் மற்றும் அப்பாடசாலை உங்கள் பிள்ளைக்கு இடமளிக்கும் பட்சத்தில் உங்கள் பிள்ளையை ஏதேனும் அரச பாடசாலையில் சேர்க்க நீங்கள் விண்ணப்பிக்கலாம். தற்போது பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் உடன்பிறப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கும் மற்றும் பாடசாலை ஊழியர்களின் பிள்ளைகளைக் கருத்தில் கொள்ளும் புதுப்பிக்கப்பட்ட உள்ளூர்ப் பகுதி அல்லாத சேர்க்கை வரைக்கூறுகளுக்கு (மாணவர்களின் நல்வாழ்வுத் தேவைகள் தொடர்பான வரைக்கூறுகள் உட்பட) பாடசாலைகள் இப்போது முன்னுரிமை அளித்து விண்ணப்பங்களைப் பரிசீலிக்க வேண்டும்.

### பாடசாலை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான உள்ளூர்ப் பகுதி அல்லாத சேர்க்கைகள் தானாகவே ஏற்றுக்கொள்ளப்படுமா?

இல்லை. தற்போது சேர்ந்துள்ள மாணவர்களின் உடன்பிறப்புகளுக்கான உள்ளூர்ப் பகுதி அல்லாத விண்ணப்பங்களுக்கு பாடசாலைகள் முன்னுரிமை அளித்ததன், பின்னர் பாடசாலை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான உள்ளூர் அல்லாத சேர்க்கைகளை பரிசீலிக்கும். நீங்கள் ஒரு பாடசாலை ஊழியராக இருந்தால், உங்கள் பிள்ளையை ஏற்றுக்கொள்வது பாடசாலையின் கொள்திறனைப் பொறுத்தது. புதுப்பிக்கப்பட்ட உள்ளூர் பகுதி அல்லாத சேர்க்கை வரைக்கூறுகள் உங்கள் பிள்ளையின் உள்ளூர் பாடசாலையில் சேர்வதற்கான உரிமையை பாதிக்காது..

## தற்காலிக வதிவிட விசாவில் உள்ள மாணவர்களுக்கான பாடசாலை சேர்க்கை

**எனது பிள்ளை தற்காலிக வதிவிட விசாவில் உள்ளார். அவரை உள்ளூர் பாடசாலையில் சேர்க்க நான் முன்பு விண்ணப்பித்தேன் ஆனால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. எனது பிள்ளையின் பாடசாலை சேர்க்கை விண்ணப்பத்தை நான் மீண்டும் சமர்ப்பிக்க முடியுமா?**

உங்கள் பிள்ளை தற்காலிக வதிவிட விசாவில் இருந்தால், அவரின் உள்ளூர்ப் பாடசாலைக்கான முந்தைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால், உங்கள் பாடசாலைச் சேர்க்கை விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்கலாம். "எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை நான் எவ்வாறு மாற்றுவது?" என்ற பிரிவின் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

**தற்காலிக வதிவிட விசாவில் உள்ள எனது பிள்ளையை, நான் ஏற்கனவே 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலையில் சேர்த்துள்ளேன். நான் என் பிள்ளையைச் சேர்த்த பாடசாலையை மாற்ற முடியுமா?**

உங்கள் பிள்ளை தற்காலிக வதிவிட விசாவில் இருந்து 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலையில் ஏற்கனவே சேர்ந்திருந்தால், அவர்கள் தற்போது சேர்க்கைப் பதிவு செய்யப்பட்ட இடத்தை மாற்ற நீங்கள் விண்ணப்பிக்கலாம். "எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை நான் எவ்வாறு மாற்றுவது?" என்ற பிரிவின் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

**எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை எவ்வாறு மாற்றுவது?**

தற்காலிக வதிவிட விசாவில் உள்ள மாணவர்களின் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் உள்ளூர்ப் பாடசாலைக்கு சேர்க்கையை மாற்ற இந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

1. தற்காலிக குடியிருப்போர் திட்டக் குழுவை 1300 300 229 என்ற எண்ணில் (தெரிவு 1) அல்லது tempvisa@det.nsw.edu.au என்ற மின்னஞ்சல் மூலம் உங்கள் பிள்ளையின் பாடசாலை மாற்றத்தைக் கோருவதற்குத் தொடர்பு கொள்ளவும். உங்கள் பிள்ளைக்கான பாடசாலை இடமாற்றம் முடிந்தவுடன், தற்காலிக குடியிருப்போர் திட்டக் குழுவால் உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.
2. உங்கள் பிள்ளையைச் சேர்க்க உங்கள் உள்ளூர்ப் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும். சேர்க்கைப் பதிவு செய்வதற்கு நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய காகித விண்ணப்பப் படிவத்தை பாடசாலை உங்களுக்கு வழங்கும். education.nsw.gov.au/find-a-public-school -இல் உங்கள் உள்ளூர்ப் பாடசாலை தொடர்பு விவரங்களைக் கண்டறியவும்

**எனது பிள்ளை 482 விசா அல்லாத வேறு விசாவில் தற்காலிகமாக வசிப்பவர். நான் சேர்க்கைப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமா?**

அரச பாடசாலையில் சேர்வதற்கான தற்காலிக வதிவிட விண்ணப்பக் கட்டணம் மற்றும் கல்விக் கட்டணம் பொதுவாக மாணவர் வைத்திருக்கும் விசா துணைப்பிரிவைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. உங்கள் விசா துணைப்பிரிவுக்குரிய கட்டணங்கள் பற்றிய விரிவான தகவலுக்கு, DE International இணையதளத்தைப் பார்க்கவும்: deinternational.nsw.edu.au/study-options/study-programs/temporary-residents. கட்டணச் சலுகைக்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பது உங்களுக்கு இன்னும் உறுதியாகத் தெரியாவிட்டால், tempvisa@det.nsw.edu.au-இல் தற்காலிக குடியிருப்போர் திட்டக் குழுவைத் தொடர்புகொள்ளலாம்.

## உள்ளூர்ப் பகுதி அல்லாத உடன்பிறப்புகளின் பாடசாலைச் சேர்க்கை

**எனது பிள்ளையை அவர்களது உடன்பிறந்தவர்கள் படிக்கும் பாடசாலையில் சேர்க்க நான் விண்ணபித்தேன் ஆனால் அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. எனது பிள்ளையின் சேர்க்கைப் பதிவு விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க முடியுமா?**

உங்கள் பிள்ளையை அவர்களின் உடன்பிறந்தவர்களின் உள்ளூர்ப் பகுதி அல்லாத பாடசாலையில் சேர்க்க நீங்கள் விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால், "எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை நான் எவ்வாறு மாற்றுவது?" என்ற பிரிவில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி மீண்டும் சமர்ப்பிக்கவும்.

**எனது பிள்ளையை 2025-ஆம் ஆண்டு பாடசாலையில் சேர்த்தேன், ஆனால் அவர்களது உடன்பிறப்பு வேறு உள்ளூர்ப் பகுதி அல்லாத பாடசாலையில் சேர்ந்துள்ளார். அவர்கள் சேர்க்கைப் பதிவு செய்யப்பட்ட இடத்தை மாற்ற நான் விண்ணபிக்கலாமா?**

உங்கள் பிள்ளை 2025-இல் சேர்ந்த பாடசாலையை, அவர்களின் உடன்பிறப்பு தற்போது படிக்கும் அதே உள்ளூர்ப் பகுதி அல்லாத பாடசாலைக்கு மாற்ற விரும்பினால், தயவு செய்து கீழே உள்ள "எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை நான் எவ்வாறு மாற்றுவது?" பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்

**எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை நான் எவ்வாறு மாற்றுவது?**

பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்களின் உடன்பிறந்தவர்கள் சேர்ந்துள்ள உள்ளூர்ப் பகுதி அல்லாத அதே பாடசாலையில் சேர்க்க விரும்பினால், அவர்களின் பாடசாலை சேர்க்கையை மாற்ற, இந்தப் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

### இணையவழி சேர்க்கைப் பதிவு விண்ணப்பங்கள்

1. நீங்கள் சேர விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலை இணையதளத்திற்குச் சென்று, மெனு (menu) தெரிவுகளில் உள்ள சேர்க்கை (enrolment) என்பதை சொடுக்கவும்.
2. சேர்க்கை (enrolment) இணையப் பக்கத்தில், சேர்ப்பது எப்படி என்ற தலைப்பின் கீழ், இணையவழி சேர்க்கைப் பதிவு விண்ணப்பத்திற்கான இணைப்பைச் சொடுக்கவும்.
3. பாடசாலையில் சேருவதற்கான உங்கள் விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பித்ததும், பாடசாலை உங்களுக்கு ஒரு இடம் வழங்கலாம், அதை நீங்கள் 14 நாட்களுக்குள் ஏற்க வேண்டும்.
4. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், 2025-இல் உங்கள் பிள்ளை முன்பு சேர்ந்த பாடசாலையைத் தொடர்புகொண்டு அந்தச் சேர்க்கைப் பதிவைத் திரும்பப் பெறுங்கள்.

### காகித படிவ விண்ணப்பங்கள்

1. உங்கள் பிள்ளையின் உடன்பிறந்தவர்களின் பாடசாலையைத் தொடர்புக்கொண்டு அவர்கள் உங்கள் பிள்ளைக்கு இடமளிக்க முடியுமா என்பதைக் கண்டறியவும்.
2. பாடசாலை உங்கள் பிள்ளைக்கு இடமளிக்க முடிந்தால், பாடசாலை வழங்கக்கூடிய புதிய காகித விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யவும்.
3. பாடசாலையில் சேருவதற்கான உங்கள் விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பித்ததும், பாடசாலை உங்களுக்கு ஒரு இடம் வழங்கலாம், அதை நீங்கள் 14 நாட்களுக்குள் ஏற்க வேண்டும்.
4. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், 2025-இல் உங்கள் பிள்ளை முன்பு சேர்ந்த பாடசாலையைத் தொடர்புகொண்டு அந்தச் சேர்க்கைப் பதிவைத் திரும்பப் பெறுங்கள்.

**2025-ஆம் ஆண்டு 6 இலிருந்து 7 ஆம் ஆண்டுக்கான மாற்றத்திற்கான ஆர்வத்தின் வெளிப்பாட்டை (Expression of Interest (EOI)) நான் சமர்ப்பித்துள்ளேன். நான் எனது பிள்ளையைச் சேர்த்த இடத்தை மாற்ற முடியுமா?**

ஆண்டு 6 இலிருந்து 7 ஆம் ஆண்டுக்கான மாற்றத்திற்கான EOI மூடப்பட்டுவிட்டது, எனவே பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை விருப்பப் பட்டியலில் மாற்றங்களைச் செய்ய முடியாது.

2025 ஆம் ஆண்டு உங்கள் பிள்ளையை நீங்கள் சேர்த்த பாடசாலையை, அவர்களின் உடன்பிறப்பு படிக்கும் அதே உள்ளூர் பகுதி அல்லாத பாடசாலைக்கு மாற்ற விரும்பினால், நீங்கள் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

### இணையவழி சேர்க்கைப் பதிவு விண்ணப்பங்கள்

1. நீங்கள் சேர விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலையின் இணையதளத்திற்குச் சென்று, மெனு (menu) தெரிவுகளில் உள்ள சேர்க்கை (enrolment) என்பதை சொடுக்கவும்.
2. சேர்க்கை (enrolment) இணையப் பக்கத்தில், சேர்ப்பது எப்படி என்ற தலைப்பின் கீழ், இணையவழி சேர்க்கைப் பதிவு விண்ணப்பத்திற்கான இணைப்பைச் சொடுக்கவும்.
3. பாடசாலையில் சேருவதற்கான உங்கள் விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பித்ததும், பாடசாலை உங்களுக்கு ஒரு இடம் வழங்கலாம், அதை நீங்கள் 14 நாட்களுக்குள் ஏற்க வேண்டும்.
4. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், 2025-இல் உங்கள் பிள்ளை முன்பு சேர்ந்த பாடசாலையைத் தொடர்புகொண்டு அந்தச் சேர்க்கைப் பதிவைத் திரும்பப் பெறுங்கள்.

### காகித படிவ விண்ணப்பங்கள்

1. உங்கள் பிள்ளையின் உடன்பிறந்தவர்களின் பாடசாலையைத் தொடர்புக்கொண்டு அவர்கள் உங்கள் பிள்ளைக்கு இடமளிக்க முடியுமா என்பதைக் கண்டறியவும். பாடசாலையின் தொடர்பைக் கண்டறிய: education.nsw.gov.au/find-a-public-school என்ற இணையப்பக்கத்தை பார்வையிடவும்.
2. பாடசாலை உங்கள் பிள்ளைக்கு இடமளிக்க முடிந்தால், பாடசாலை வழங்கக்கூடிய புதிய காகித விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யவும்.
3. பாடசாலையில் சேருவதற்கான உங்கள் காகித விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பித்ததும், பாடசாலை உங்களுக்கு ஒரு இடம் வழங்கலாம், அதை நீங்கள் 14 நாட்களுக்குள் அல்லது கூடிய விரைவில் ஏற்க வேண்டும்.
4. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உங்கள் EOI இடத்தை ஏற்கனவே நீங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால், உங்கள் சேர்க்கைப் பதிவை திரும்பப் பெற பாடசாலையை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

## பாடசாலை ஊழியர்களின் உள்ளூர் பகுதி அல்லாத பிள்ளைகளின் சேர்க்கை

**நான் பணிபுரியும் பாடசாலையில் என் பிள்ளையை சேர்க்க விண்ணப்பித்தேன், ஆனால் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. எனது பிள்ளையின் சேர்க்கை பதிவு விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க முடியுமா?**

நீங்கள் பணிபுரியும் பாடசாலையில் உங்கள் பிள்ளையைச் சேர்க்க விண்ணப்பித்து உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால், நீங்கள் மீண்டும் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு செய்ய, மேலே உள்ள "எனது பிள்ளையை நான் சேர்த்த 2025-ஆம் ஆண்டிற்கான பாடசாலை இடத்தை நான் எவ்வாறு மாற்றுவது?" என்ற பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

## மேலதிக தகவலை நான் எங்கே அறியலாம்?

**பாடசாலை சேர்க்கை பற்றிய தகவலுக்கு, நீங்கள் விரும்பும் பாடசாலையுடன் பேசவும். உங்கள் பாடசாலையின் தொடர்பு விவரங்களைக் கண்டறிய: education.nsw.gov.au/find-a-public-school என்ற இணையப்பக்கத்தை பார்வையிடவும்.**

**NSW அரச பாடசாலையில் எவ்வாறு சேர்வது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு: education.nsw.gov.au/enrolment**

**NSW அரச பாடசாலையில் தற்காலிக குடியுரிமையில் உள்ள மாணவர் எவ்வாறு சேர்வது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு: https://www.deinternational.nsw.edu.au/**

**பொது சேர்க்கை பற்றிய தகவலுக்கு, கல்வித் துறையின் தலைமை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்: 1300 679 332**

**தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை**

பாடசாலை அல்லது கல்வித் துறையைத் தொடர்புகொள்வதற்கு உங்களுக்கு ஒரு உரைப்பெயர்ப்பாளர் தேவைப்பட்டால், தயவு செய்து 13 14 50 என்ற எண்ணில் தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையைத் தொடர்புகொண்டு உங்கள் மொழியில் உரைப்பெயர்ப்பாளரைக் கேட்கவும். நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் கூறுங்கள், உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ ஒரு உரைப்பெயர்ப்பாளரை இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.